සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம் தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province Department of Education, Southern Province Department of Education, Southern Province

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	22 – தமிழ்மொழியும் இலக்கியமும் - I දෙමළ භාෂාව හා සාහිත්‍ය - I	කාලය நேரம் Time: 1 மணி

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- இலக்கம் 1 – 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 விடைகளுள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (x) அடையாளமிடுக.

- **தடித்த எழுத்தில் உள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "கானத்திடையிருந்து வந்து கமல மதுவுண்ணும்" இங்கு **கமலம்** என்பது
   (1) தேன் (2) காடு (3) தாமரை (4) மணம்
2. "கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்....." இங்கு **கயிரவம்** என்பது
   (1) கயிறு (2) வயல் (3) குவளை (4) ஆம்பல்
3. "கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய்" இங்கு **கிஞ்சுகம்** என்பது
   (1) பவளம் (2) சிவப்பு (3) வளையல் (4) கெஞ்சுதல்
4. "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்" இங்கு **தமர்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) தம்பி (2) கோன் (3) பிறர் (4) தேவர்
5. "தச்சன் செய்த சிறுமா வையம்" இங்கு **தச்சன்** என்பதன் எதிர்ப்பால்
   (1) தாதி (2) தச்சிச்சி (3) தச்சி (4) தச்சாள்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. ஒத்த பொருள் தரும் சொற்களின் தொகுதி
   (1) வரை, குன்று, ஆரம் (2) தனு, சிலை, சீலை
   (3) ஒளி, சோதி, ஒலி (4) அளி, சுரும்பு, மதுரகம்
7. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன
   (1) ஐம்புலன் (2) ஐம்பொன் (3) ஐம்பூதம் (4) ஐம்பொறி
8. பின்வருவனவற்றுள் உவமைத் தொடர் அல்லாதது
   (1) பூவும் மணமும் போல (2) மணியும் ஒலியும் போல
   (3) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி (4) நகமும் சதையும் போல
9. பின்வருவனவற்றுள் இணைமொழி
   (1) திருதிரு (2) ஆரஅமர (3) மடமட (4) படபட

Past Papers Wiki

10. 'நித்திரை செய்தல்' என்ற கருத்தைத் தரும் மரபுத் தொடர்
(1) கண் எறிதல் (2) கண் வைத்தல் (3) கண்அயர்தல் (4) கண் காட்டல்

11. பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போரைக் குறிக்கும் ஒரு சொல்
(1) நொதுமலாளர் (2) தபுதாரன் (3) தீர்க்கதரிசி (4) ஆத்திகன்

12. மீன் குஞ்சு என்பது போல யானை
(1) குருளை (2) போதகம் (3) பறழ் (4) பேத்தை

13. பின்வருவனவற்றுள் விரைவுக் குறிப்பு உணர்த்தும் சொல்
(1) திடுதிடென (2) திடீரென (3) திட்கென (4) திடுக்கென

14. பின்வருவனவற்றுள் ஒல்லாந்த மொழிச் சொற்கள் கொண்ட தொகுதி
(1) கேத்தல், நொத்தாரிசு, தோம்பு (2) பென்சில், மைல், சினிமா
(3) குசினி, பீரோ, பட்டாளம் (4) கடதாசி, கரத்தை, சப்பாத்து

15. 'அவனுக்கு சுமார் ஐம்பதாயிரம் ரூபா தேவைப்படும்' சுமார் என்ற சொல்லுக்குப் பொருத்தமற்ற தொடர்
(1) அண்ணளவாக (2) கிட்டத்தட்ட (3) ஆகக் குறைந்தது (4) ஏறக்குறைய

16. 'அங்குரார்பணம்' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது
(1) தொடக்கம் (2) அழிவு (3) செழிப்பு (4) முடிவு

17. கடினமான காரியமாயினும் அதை மீண்டும் மீண்டும் செய்ய முயன்றால் வெற்றி பெறலாம் என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) அடுத்து முயன்றாலும் ஆகுநாளே ஆகும். (2) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
(3) பதறாத காரியம் சிதறாது (4) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

18. சிறுகதை, நாவல், குறுநாவல் என்பவற்றைக் குறிப்பதற்குப் பயன்படும் பொதுச் சொல்
(1) சிற்றி + கியம் (2) பிரபந்தம்
(3) புனை கதை இலக்கியம் (4) காப்பியம்

19. வளர்ச்சி, விருத்தி, கூர்ப்பு என்பவற்றுக்கு நிகரான சொல்
(1) பரிமாணம் (2) பரிணாமம் (3) ஆரோக்கியம் (4) பரிவு

20. பின்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்டு நிற்கும் சொல்
(1) மாலை (2) ஆரம் (3) தாமம் (4) நாமம்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயர்
(1) வளர்ச்சி (2) மணமேடை (3) நீரேரி (4) கங்கைக்கரை

22. பின்வருவனவற்றுள் ஆக்க வினையடை
(1) வேகமாக (2) மெல்ல (3) அழகிய (4) பழைய

23. விகராப் புணர்ச்சி இடம் பெற்ற சொல்
(1) கடலலை (2) கலைவிழா (3) கண்ணிமை (4) மண்வீடு

24. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு
(1) இவ்வீடு (2) இவன் (3) மனிதன் (4) அறம்

25. பின்வருவனவற்றுள் பண்புத்தொகை
(1) பனிக்குளிர் (2) விடுகதை (3) இன்சொல் (4) வட்டம்

26. செயப்படுபொருள் குன்றிய வாக்கியமாக அமைவது
(1) தம்பி படித்தான் (2) தம்பி பாய்ந்தான் (3) தம்பி நனைந்தான் (4) தம்பி நனைத்தான்

27. அவனது பாட்டில் சுதி சரியாக அமைவதில்லை இங்கு சுதி என்பது
(1) மரூஉ (2) போலி (3) மங்கலம் (4) குழூஉக்குறி

28. பல பொருள் தரும் உரச்சொல்
(1) சால (2) கடி (3) உறு (4) தவ

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க

29. (1) வினைத் தொகை : சுடுசோறு, குளிர் நிலவு, நெடுவானம்
(2) பிறவினை : ஊட்டினாள், காட்டினாள், கற்பித்தால்
(3) ஏவல் வினை : நில், நிற்காதே, ஓடாதே
(4) செய்வினை : இயற்றினான், உண்டான், கொன்றது

30. (1) தொழிற் பெயர் : காணுதல், படித்தல், உண்ணல்
(2) காரணப் பெயர் : காதணி, வளையல், பறவை
(3) மாற்றுப் பெயர் : நான், நீ, அவன்
(4) சினைப் பெயர் : மரம், கனி, வேர்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

31. ஸ்ரீ முத்துமாரியம்மாள் கோவில் நிருவாகிகள் தாம் புதிதாகச் செய்த தேரை ..... பார்த்தனர்.
(1) ஓட்டிப் (2) அரங்கேற்றம் (3) அழகு (4) வெள்ளோட்டம்

32. சிறந்த விமர்சகர் எந்த நூலையும் ..... இன்றி நடுநிலையாக நின்றே விமர்சிப்பர்.
(1) கணக்கு வழக்கு (2) விருப்பு வெறுப்பு (3) விதிவிலக்கு (4) நயத்தல்

33. பொதுச் சொத்துக்களை மக்கள் ..... பாதுகாத்தல் வேண்டும்.
(1) ஆய்ந்தோய்ந்து (2) வாட்டசாட்டமாய்
(3) ஆராயாது (4) கண்ணுங் கருத்துமாய்

34. வீதி விபத்துக்களால் ..... மனித உயிர்கள் கொலை செய்யப்படுகின்றன.
(1) ஈவிரக்கமின்றி (2) குறைநிறையின்றி
(3) தங்குதடையின்றி (4) விருப்பின்றி

35. மண்ணாசை கொண்டு ஒரு மன்னன் மற்றொரு மன்னன் மீது தொடுக்கும் போர் ..... ஆகும்.
(1) பாரதப் போர் (2) வஞ்சிப் போர் (3) களப் போர் (4) அறப் போர்

36. கலைத் துறைகள் பலவற்றையும் பற்றிய தகவலை அகராதியொழுங்கில் தரும் நூல் ..... ஆகும்.
(1) அகராதி (2) சங்கநிதி (3) கலைக்களஞ்சியம் (4) கையுரை

• கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.

கல்லைத்தான், மண்ணைத்தான், காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான், பொன்னைத்தான், எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?
அல்லைத்தான், சொல்லித்தான், ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான், திறக்கத்தான், பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே

37. அக்கவிதை எதைப் பற்றி எடுத்துரைக்கின்றது?
(1) பூமியைப் பற்றி (2) தொழிலைப் பற்றி
(3) வறுமை நிலையைப் பற்றி (4) கற்பித்தலைப் பற்றி

38. இங்கு கையாளப்பட்டுள்ள அணி
(1) உருவகம் (2) எதுகை (3) மோனை (4) சிலேடை

39. பதுமத்தான் என்ற தொடர் உணர்த்துவது
(1) இறைவன் (2) ஆசிரியன் (3) தொழிலாளி (4) மன்னன்

40. • கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) பழந் தமிழகத்தில் மேல் நாடு சேரனுக்கும், கீழ் நாடு சோழனுக்கும், தொன்னாடு பாண்டியனுக்கும் உரயனவாயிருந்தன.

(ஆ) பழம் பெருமை வாய்ந்த பாரத நாட்டின் தென்பால் விளங்குவது தமிழ் நாடு

(இ) இங்கனம் மூன்று கவடாய் முளைத்தெழுந்த தமிழகம் மூவேந்தரது ஆட்சியிலே தழைத் தோங்கி வளர்ந்தது.

(ஈ) சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தரால் மதிழகம் ஆளப்பட்டதென்பர்.

(உ) எனவே, நாம் மூவேந்தரைப் போற்றுவோம்.

(1) ஆ, அ, இ, ஈ, உ (2) ஈ, உ, ஆ, அ, இ
(3) ஆ, ஈ, அ, இ, உ (4) உ, இ, ஈ, ஆ, அ

(1 x 40 புள்ளிகள்)

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	22 – தமிழ்மொழியும் இலக்கியமும் - II දෙමළ භාෂාව හා සාහිත්‍ය - II	කාලය நேரம் Time: 2 මණි

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

கவனிக்க.

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளி 80 ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

   i. “சிறுவர் பாடல்கள் சிறுவர் உளவியலுக்கேற்ப உருவாக வேண்டும்.”
   இந்த வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

   ii. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
   “பெருந்தே னிழைக்கும்”

   iii. பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
   “மகேன் ஒனக்கு நன்ம கெடக்கும்”

   iv. பின்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.
   படைப்புத்திறனைக் கற்பிக்க முடியாதா இது என்ன புதிர் என்று சிலர் ஆச்சரியப்படலாம்

   v. யூதாஸ் இயேசுவின் கூடவேயிருந்தான்.
   யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.
   இவ்விரு வாக்கியங்களிலும் கூறப்பட்டுள்ள விடயங்களை ஒரே வாக்கியத்தில் எழுதுக.

   vi. “வளை” என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கவகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

   vii. “நாசா செவ்வாய்க்கிரகத்தை ஆய்வு செய்தது” என்னும் செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

   viii. “ஆசைக்கிளியே என்ர ஆசியத்து உம்மாவே”
   அ. இங்கு இடம்பெற்றுள்ள அணியை குறிப்பிடுக.
   ஆ. இது எவ்வகைப் பாடலாகும்?

   ix. அ. சிவன், பிரம்மா, விஷ்ணு
   ஆ. அறம், பொருள், இன்பம், வீடு
   என்பவற்றை குறிக்கும் தொகைச் சொற்களைத் தருக.

   x. பின்வருவனவற்றுள் அழைப்பிதழ் ஒன்றின் முக்கிய அம்சங்கள் எவை?
   தலைப்பு, சட்டகம், விளிப்பு, உதாரணம், கூறியது கூறல்

(2x10 = 20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

i. நாம் உண்ணும் உணவே எமது ஆரோக்கியத்திற்கு அடிப்படையாகும். ஆனால் இன்று உணவுப்பழக்கவழக்கங்கள் தவறானவையாக காணப்படுகின்றன. இதனால் உடலின் ஆரோக்கியமும் பாதிப்படைகிறது. எனவே எமது உணவு பழக்கவழக்கங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது. இன்றைய உணவு பழக்கவழக்கம், அதன் பாதிப்பு, அதனை மாற்றியமைக்க வேண்டிய முறைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு விளக்கக் கட்டுரை.

ii. இன்றைய நவீன யுகத்திலே தகவல் தொடர்பாடல் சாதனங்கள் அசுர வளர்ச்சியடைந்துள்ளன. அதன் அங்கங்களாக இணையமும் செல்லிடத் தொலைபேசியும் காணப்படுகின்றன. இவற்றினால் நன்மைகளை பெறுகின்ற அதே வேளை தீமைகளையும் எதிர்க்கொள்கிறோம். இவற்றை கருத்தில் கொண்டு இரு நண்பர்களிடையே இடம்பெற்ற ஓர் உரையாடல்.

iii. சிக்கனம் என்பது மனித வாழ்விற்கு இன்றியமையாதது. மனிதன் செம்மையாக வாழ்வதற்குப் பணம் இன்றி அமையாதது. எனவே பணத்தை தேடுவது மட்டுமின்றி அதனை சிக்கனமாகவும் செலவு செய்ய வேண்டும். அத்துடன் நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்களான நீர், மின்சாரம் போன்றவற்றையும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மேலும் நேரத்தைச் சிக்கனமாக பயன்படுத்துவதும் அவசியமாகும். இக்கருத்துக்களை வலியுறுத்தி பாடசாலை மாணவர் மன்றத்தில் நீர் நிகழ்த்தும் ஒரு மேடை பேச்சு.

iv. அச்சுவேலிக் கிராமத்தைச் சேர்ந்த இனியாவுக்கு அண்மையில் நடந்து முடிந்த தேசிய மட்ட விளையாட்டு விழாவில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு இடம்பெற்ற 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்து அவள் தங்கப் பதக்கத்தை பெற்றாள். அவளது சாதனையை பாராட்டி கௌரவிப்பதற்காக முழுக்கிராமமே ஒன்று திரண்டது. இத்தகைய மகிழ்ச்சி அவள் அடைய கடந்த காலத்தில் அவள் பட்ட கஷ்டங்கள் பல. இனியாவின் எண்ணங்கள் பின்னோக்கிச் செல்கின்றன. இக்கருவை பிரதிபலிப்பதாக அமைந்த ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

முச்சங்கம் கண்டது எங்கள் தமிழ். இயல் உடையது. இசையுடையது. இனிய கூத்துடையது. எங்கள் தமிழ் என்றெல்லாம் இன்று பெருமை பாராட்டுகிறோம் நாம். அப்பெருமையை இன்று நாம் அடைய, அன்று அவற்றை ஆக்கி அளித்தார்கள் புலவர் பெருமக்கள் பல்லோர். அப்புலவர்கள் ஆன்றவிந்தடங்கிய அறிவுடையராய், அருந்தமிழ்ப் பாக்களை ஆக்கி அளித்த அப்பணியினை, அன்று மேற்கொண்டமையினாலேயே, இன்று நாம் பெருமை கொள்கிறோம். அவர்கள் அருந் தமிழ் பாக்களை ஆக்கி அளிக்கும் அப்பணியை கைவிட்டு, எல்லோரையும் போன்று, தம் வயிற்று வாழ்விற்காவனவே தேடி அலையும் அப்பணியை மேற்கொண்டிருப்பரேல் அன்று அருந் தமிழ்ப் பாக்கள் தோன்றியிரா, இன்று நாமும் பெருமைகொண்டிருத்தல் இயலாது. அப்புலவர் பெருமக்கள் தம் வாழ்விற்காம் வகைதேடி உழலாது அமிழ்தினும் இனிய அருந்தமிழ்ப் பாக்களைப் பாடிக்கிடக்கும் பணியினராக அன்று வழிசெய்து தந்தவர், அன்று நாடாண்ட அரசர்களும், அவ்வரசர்களேபோலும் சீருடைச் செல்வர் சிலருமேயாவர். அவர்கள், அப்புலவர்கள் வேண்டும் போதெல்லாம், வேண்டிய பொருளை விரும்பி அளித்து வந்தனர். அரசரும், பிறரும் பொருள் அளித்துப் பேணிப் புரந்தமையாற் புலவர்கள் பொருள் தேடியலையும் பணியற்றவராயினர் வாழ்வுபற்றிய கவலை அவர்க்கு இலதாயிற்று. அதனால் அவர்கள் உள்ளத்தே அமைதி நிலவிற்று. அவ்வமைதி நிறைந்த உள்ளத்தோடு உலகத்தை ஊன்றி ஊன்றி நோக்கினார்கள். உலகம் அவர் உள்ளத்தே உருப்பெற்றது. ஆண்டு உருப்பெற்ற உலகம், அவர் உரையில் இடம் பெற்றது. உயிரோவியமாக வெளிப்போந்தது. உலகியல் உணர்த்தும் பாக்கள் பற்பல உண்டாயின. ஆகவே, அரிய பாக்களைப் பாடி அன்று மொழிவளர்த்தவர், அவ் அருந்தமிழ்ப் புலவர்களே எனினும், உண்மையில் தமிழ் வளர்த்தோர், அப்புலவர்களுக்குப் பொருள் அளித்துப் பேணிய புரவலர்களே ஆவர். ஆகவே இன்று அம்மொழிக் கொண்டு பெருமை கொள்ளும் நாம் அனைவரும், அன்று வரையாது வழங்கித் தமிழ்வளரத் துணைபுரிந்த அவ்வள்ளியோர்க்கு நன்றி செலுத்த கடமைப்பட்டவராவோம்.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முறையாகக் கற்றலும் செய்யாது, கற்று வல்லாரை அடைந்து வழிபாடியற்றிப் பெறுதற்குரிய கேள்விச் செல்வமும் எய்தப் பெறாது தமிழ்த்தொண்டு செய்ய முற்படுதல் பயனில் செயலாகும். முன்னோர் மொழி பொருளையும் மரபுபட்ட இலக்கண முடிபுகளையும் ஆராய்ந் தறிந்துகொள்ளாது நெறியறியா மாக்களை மயக்கி அவர்தம்மை நெறியல்லா நெறியிற் புகுத்தி ஆரவாரிப்போர் செயலானது, குருடனைக் குருடன் வழி நடத்துவது போலாகும். அவைக்களத்திற் செல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை "வேந்தன் மொழி" (King's English) என அம்மொழிப் புலவர் விதந்து கூறுவர். அப்பரிசே, யாமும் அவைக்களத்திற் செல்லுதற்குரிய வரம்பினமைந்த தமிழினைப் "பாண்டியன் தமிழ்" என்போம். "எது தமிழ்?" என வினவுவார்க்குப் "பாண்டியன் தமிழே தமிழ்" என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது. அறிஞர் போற்றற்குரியது. பொருள் வருவாய் ஒன்றினையே கருதி மனம் போனவாறு மரபு தவறி எழுதும் மொழிவழக்கானது மழைக் காலத்திலே தோன்றி அக்காலங்கழிய மறைந்துபோகின்ற சிறு பூடுகளைப் போல நிலைபேறில்லாதது நிலைபேறுடைய "உண்மை" (Truth), "அழகு" (Beauty), "செம்மை" (Goodness) என்னும் இவைதம்மையே அறிஞரது உள்ளம் அவாவி நிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினையும், இசைத் தமிழானது அழகினையும், நாடகத்தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டுவன.

1. எத்தகைய தமிழ்த் தொண்டில் பயனில்லை என கூறப்பட்டுள்ளது?
2. தமிழ்த் தொண்டு செய்ய ஏற்றவர் யார்?
3. ஆராய்ந்து அறியவேண்டியன யாவை?
4. மரபு தவறி எழுதும் மொழிவழக்கு. எத்தகையது?
5. அறிஞரது உள்ளம் விரும்பும் பண்புகள் யாவை?

(10 புள்ளிகள்)

5. அராலி பிரதேசத்தில் இயங்கும் பாடசாலைகளில் மரநடுகை தொடர்பான செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக மரநடுகை செயற்றிட்டத்தினை உமது பாடசாலையிலும் மேற்கொள்ள பாடசாலையின் சுற்றாடல் குழு தீர்மானித்துள்ளது. சுற்றாடல் குழுவின் செயலாளர் த.தம்பிநாதன் என உங்களைக் கருத்திற் கொண்டு மரநடுகை செயல்திட்டத்திற்கு உதவி கோரி பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக அராலி பிரதேச செயலாளரான சு.விசாகன் அவர்களுக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- மரக்கன்றுகளின் தேவை
- அதைப் பற்றிய விளக்கங்கள், ஆலோசனைகள்
- பராமரிப்பு முறைகள்
- நேரடி உதவிகள்

அல்லது

கடந்தவாரம் அளவெட்டி மகாவித்தியாலயத்தில் மாகாண இலக்கிய விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் இடம்பெற்ற இவ்விழாவின் செயலாளர் ம.மங்கையர்க்கரசி என உம்மைக் கருதி பாடசாலை அதிபருக்கு, பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக 100 சொற்களில் அறிக்கை ஒன்றை எழுதுக.

- காலம், இடம்
- விசேட அதிதிகளின் வருகை
- கலை நிகழ்ச்சிகள்

(15 புள்ளிகள்)

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	22 – தமிழ்மொழியும் இலக்கியமும் - III දෙමළ භාෂාව හා සාහිත්‍ය - III	කාලය நேரம் Time: 2 மணி

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

கவனிக்க :

- இவ்வினாத் தாளுக் குரிய புள்ளி 80 ஆகும்.
- அறிவுறுத்தலுக் கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

---

(1) சுருக்கமாக விடை எழுதுக.

1. "யானை அனையவர் நண்பொரீஇ நாய் அனையர்..."

   அ) நண்பு

   ஆ) ஓரீஇ

   ஆகியவற்றின் பொருளைத் தருக.

2. "செய்யுறு பாவைக்கு கொய்பூத் தைஇத் தண்கய மாடு"

   அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டு யாது?

   ஆ) தண்கயம் என்பதால் உணர்த்தப்படுவது யாது?

3. "கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் கடலிலுண்டு"

   அ) இங்கு இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

   ஆ) விலக்கத்தக்கது என இங்கு கூறப்படுவது யாது?

4. "பொய்கை ஊரன் கேண்மை

   செய்து இன் புற்றனெம்"

   அ) கேண்மை என்பதன் பொருள் யாது?

   ஆ) "ஊரன்" என்பது இங்கு யாரைக் குறித்து நிற்கிறது?

5. "அத்திறம் நிற்க"

   அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?

   ஆ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

6. "ஏர் தழைக்க வேண்டும் தம்பிரானே"

   அ) "ஏர் தழைக்க வேண்டும் என்ற தொடர்பால் உணரப்படுவது யாது?

   ஆ) தம்பிரான் என்பது யாரைக் குறித்து நிற்கிறது?

7. "ஏலம்பு வாய் பொசுங்கு
எரியுது தீக் கெழுந்து
காலப் புனல் கனக்கு"

அ) இத் தொடரினூடாக உணர்த்தப்படுவது யாது?

ஆ) இங்கு இடம்பெற்றுள்ள அணியை எடுத்துக் காட்டுக.

8. "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

அ) 'கேளிர் என்பதன் பொருள் யாது?

ஆ) இத்தொடர் உணர்த்தும் விழுமியப் பண்பு யாது?

9. "மதியினிற் புலை நாத்திகங் கூறுவார்"

அ) மதி என்பதன் பொருள் யாது?

ஆ) நாத்திகம் என்றால் என்றால் என்ன?

10. "பரிந்தவர் நினைவுநாள் பகருவார் இல்லை"

அ) 'பரிந்தவர்' என்பதால் உணர்த்தப்படுவது யாது?

ஆ) இத்தொடர் உணர்த்தும் சுவை யாது?

(2 x 10 = 20 புள்ளிகள்)

(2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

அ) சித்தர்களின் செயலைக் குறிப்பிடுக.

ஆ) திருக் குற்றால நாதரின் பெருமை எவ்விதம் புலப்படுத்தப்படுகிறது?

ii. பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

அ) இங்கு வாய்மையின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

ஆ) மதியிழந்து தன் வாயிழந்து போனவர் யார்?

Past Papers Wiki

iii. விதியே நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர், பொய்ச் சாத்திரம் பேசுவர்
சாத கங்கள் புரட்டுவர் பொய்மைசேர்
மதியி னற்புலை நாத்திகங் கூறுவர்
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணி லாதவர் போலத் திகைப்பர் காண்.

அ) இங்கு கையாளப்பட்டுள்ள உவமையை விளக்குக.
ஆ) நன்மையைத் தரக்கூடியது யாது?

iv. இந்த இருவரும் இலங்கைச் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்குப் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்வசன வாக்குரிமையைப் பற்றி அந்தக் காலத்திற் பேசுவதும் கிடையாது. உரிமையுள்ளவர்களுங் குறித்த ஓரிடத்திற்குப் போய்த் தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவதுமில்லை. கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பது வழக்கம். இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம். விசுவநாதபிள்ளையின் தலைமையில் நடக்கின்றது. அந்தக் கூட்டத்திற்கு வாதமகாசபை என்றும் பெயர் வைத்துக்கொள்ளலாம். நாவலர் அவர்கள் கூட்ட நடைமுறைகளை அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். வாதப் பிரதிவாத மின்னல்கள் முழக்கங்கள் நடக்கின்றன.

அ) கூட்டம் யாருடைய தலைமையில் நடைபெற்றது?
ஆ) கூட்டம் எதற்காக நடைபெற்றது?

v. இந்த பக்தி இலக்கியம் உண்டாவதற்கு நம் அகத்திணை இலக்கியம் ஒருவாறு துணையாக இருந்திருத்தல் வேண்டும். இன்று தமிழ் மொழியை ஆராயும் போது பக்தியை உணர்த்தும் சொற்கள் பல அமைவதைக் காண்கிறோம். ஆதலால் சமயப் பொருளற்ற பிற நூல்களிலும் இந்த மொழி ஒலிக்கிறது. எடுத்துக்காட்டாகப் பாரதிதாசன் பாடிய தமிழ்மொழி பற்றிய பாடல்கள் பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்டவை. நாயன்மார், ஆள்வார், சேக்கிழார், கம்பர் போன்றவர்களுடைய பக்திப் பண்பு உலகிலேயே நிகரற்றது.

அ) பக்தி இலக்கியம் தோன்ற துணையாய் அமைந்த காரணி யாது?
ஆ) பக்திப் பண்பில் சிறந்து விளங்கியவர்கள் யாவர்?

(20 புள்ளிகள்)

(3) 'மூத்தம்மா' சிறுகதையில்
அ) மனிதாபிதான உணர்வுகள்
ஆ) கிராமிய மூடநம்பிக்கைகள்
ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

அல்லது

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

கம்பராமாயணம் 'குகப்படலத்தில்'

அ) கைகேயி மீதான வெறுப்புணர்வு

ஆ) குகனின் உயர் பண்புகள்

ஆகியன புலப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

(4) 'கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்'

அ) வில்லிபுத்தூராரின் கவித்துவம்

ஆ) வீமனின் வீராவேசம்

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

அல்லது

'தத்தை விடு தூது' பாடப்பரப்பில்,

அ) உவமை அணிப் பயன்பாடு

ஆ) பெண் விடுதலைக் கருத்துக்கள் என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விளக்குக.**

(5) 'நாட்டார் பாடல்களில்'

அ) மீனவர் பாடல் உணர்த்தும் நம்பிக்கை உணர்வுகள்

ஆ) காதல் பாடலில் காதலியை அடையத் துடிக்கும் காதலனின் உள்ளத்து உணர்வுகள்

ஆகிய சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

(6) 'அற்றைத் திங்கள்' நாடகத்தில்,

அ) கபிலருக்கும் பாரிமன்னனுக்கும் இடையிலான உறவு

ஆ) பாரி மகளிரின் உளக்குமுறல்கள் என்பன புலப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

(7) திருக்குறள் 'பேதைமை' என்ற அதிகாரத்தில்

அ) அணிப் பயன்பாடு

ஆ) பேதையருடனான நட்பு

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

(10 புள்ளிகள்)

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank